செய்தி வெளியீடு எண். /10/2017 நாள் 3.10.2017

## பத்திரிக்கைச் செய்தி

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அடங்கிய 11 சட்டமன்ற தொகுதிகளுக்கும் சிறப்பு சுருக்கமுறை திருத்தம், 2018க்கான வரைவு வாக்காளர் பட்டியல் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மற்றும் அனைத்து வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்களில் இன்று 03.10.2017 வெளியிடப்பட்டது. இவ்வரைவு வாக்காளர் பட்டியலை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வெளியிட்டார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 03.10.2017 அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலின்படி மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 37,51,230. இதில் ஆண் வாக்காளர்கள் எண்ணிக்கை 18,54,276. பெண் வாக்காளர்கள் எண்ணிக்கை 18,96,603. இதர வாக்காளர்கள் எண்ணிக்கை 351.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அடங்கிய 11 சட்டமன்ற தொகுதிகளின் தற்போதைய வாக்காளர்களின் (03.10.2017)ன்படி விவரம் பின்வருமாறு.

| சட்டமன்ற தொகுதியின் எண்.மற்றும் பெயர் | 03.10.2017 அன்றைய வாக்காளர்களின் விவரம் | | | |
|---|---|---|---|---|
| | ஆண்கள் | பெண்கள் | இதர | மொத்தம் |
| 27, சோழிங்கநல்லூர் | 3,13,789 | 3,10,542 | 74 | 6,24,405 |
| 28, ஆலந்துார் | 1,79,335 | 1,80,887 | 07 | 3,60,229 |
| 29, திருப்பெரும்புதுார்(தனி) | 1,54,847 | 1,62,959 | 47 | 3,17,853 |
| 30, பல்லாவரம் | 2,08,776 | 2,09,403 | 25 | 4,18,204 |
| 31, தாம்பரம் | 1,95,888 | 1,96,180 | 35 | 3,92,103 |
| 32, செங்கல்பட்டு | 1,90,470 | 1,95,923 | 43 | 3,86,436 |
| 33, திருப்போரூர் | 1,31,664 | 1,35,846 | 19 | 2,67,529 |
| 34, செய்யூர்(தனி) | 1,07,139 | 1,10,094 | 29 | 2,17,262 |
| 35, மதுராந்தகம்(தனி) | 1,09,948 | 1,14,615 | 47 | 2,24,610 |
| 36, உத்திரமேரூர் | 1,17,836 | 1,25,782 | 14 | 2,43,632 |
| 37, காஞ்சிபுரம் | 1,44,584 | 1,54,372 | 11 | 2,98,967 |
| மொத்தம் | 18,54,276 | 18,96,603 | 351 | 37,51,230 |

வாக்காளர் பட்டியலை அனைத்து வாக்குச்சாவடி மையங்கள், வாக்காளர் பதிவு அலுவலர்/ சார் ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்ட அலுவலர் அலுவலகங்கள் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்/ வட்டாட்சியர் மற்றும் நகராட்சி ஆணையர் அலுவலகங்களில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படும். பொது மக்கள் அலுவலக நேரங்களில் இந்த வரைவு வாக்காளர் பட்டியலை நேரடியாக பார்வையிடலாம்.

மேலும், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல்/நீக்கல்/திருத்தல் தொடர்பான மனுக்கள் வருகின்ற 3.10.2017 முதல் 31.10.2017 வரை அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களில் பெறப்படும்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல்/நீக்கல்/திருத்தல் மனுக்கள் தொடர்பான சிறப்பு முகாம் வருகின்ற 08.10.2017 (ஞாயிற்று கிழமை), மற்றும் 22.10.2017 (ஞாயிற்று கிழமை) தேதிகளில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை அனைத்து வாக்குச்சாவடி மையங்களில் நடைபெறவுள்ளது.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல்/நீக்கல்/திருத்தல் தொடர்பான விவரங்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் சரிவர உள்ளதா என்பதை தெரிந்து கொள்ள ஏதுவாக 07.10.2017(சனிக்கிழமை) மற்றும் 21.10.2017(சனிக்கிழமை) ஆகிய தேதிகளில் சிறப்பு கிராமசபைக் கூட்டம் நடைபெறவுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
காஞ்சிபுரம்.

<u>செய்தி வெளியிடுபவர்-</u>
செய்தி தொடர்பு அலுவலகம்,
காஞ்சிபுரம்.